அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2003

எனது இல.தா/111/3/5-1
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2003.05.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**2003 ஆம் ஆண்டின் மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, சூறாவளி, மண்சரிவுகள் காரணமாக இழப்புகளுக்கு உள்ளான அரச அலுவலர்களுக்கு விசேட முற்பணமொன்றை வழங்குதல்,**

2003 மே மாதத்தினுள் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, சூறாவளி, மண்சரிவு ஆகியவைகளினால் வீடுகள், சொத்துக்கள், மற்றும் தமது வீட்டுப் பொருட்கள் என்பவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களின் பொருட்டு இழப்புகளுக்கு உள்ளான பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் தகைமைகளைப் பெற்ற அரசு அலுவலர்களுக்கு வட்டி இன்றி விசேட முற்பணமொன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 இவ் விசேட கடன் பணம் அலுவலரின் ஒரு மாத்திற்கான படிகள் அடங்காத திரட்டிய சம்பளத்திற்கு சமமாக வேண்டியதுடன், சரிசமமான பத்து மாத கட்டணங்களால் மீள அறவீட்டுக் கொள்ள வேண்டும்.

03 கடன் தொகையை கோரும் போது வீட்டுக்கும் , வீட்டுப் பொருட்களுக்கும் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான மதிப்பீடொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

04 இந்த மதிப்பீட்டின் பிரகாரம் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக உரிய பிரதேசத்தின் கிராம அலுவலரால் நிரூபிக்கப்பட்டு, பிரதேச செயலாளரால் சிபாரிசு செய்தல் வேண்டும்.

05 அலுவலர் அல்லது அவரது குடும்பத்தினர்கள் வசிக்கின்றதும், அலுவலர் அல்லது அவரின் வாழ்க்கைத் துணைவருக்குச் சொந்தமான வீட்டுக்கு, வீட்டுப் பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்குமாயின் அவற்றை பழுதுபார்த்து கொள்வதற்காகவும் இந்தக் கடனை பெற முடியும்.

06 இந்தக் கடன் தொகையை தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தில் 3 ஆவது பிரிவில் காட்டடப்பட்டுள்ள சம்பளத்தில் கழித்துக் கொள்ள இயன்ற மாத கழிவுகளின் கூட்டு மொத்த வரையறையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

07 இந்தக் கடனுக்காக பிணையாளிகளை முன்வைத்தல் தேவைப்படாது. ஆயினும் தற்காலிக, அமய, ஊழியர்களுக்கு இக் கடன் முற்பணத்தை செலுத்துவதாயின் அரசாங்கத்தின் நிரந்தர ஊழியரொருவரை பிணையாளியாக முன் வைத்தல் வேண்டும்.

08 2003 ஆம் ஆண்டின் மதிப்பீடுகளுக்கமைய அரசு அலுவலர்களினது முற்பணக் கணக்கின் கீழ் விதித்துரைக்கப்பட்ட செலவீனத்தின் உச்ச எல்லைக்கு உட்பட்டு ***இக் கொடுப்பனவு பணிகளை மேற்கொள்ளுதல்*** வேண்டும். எதுவித காரணத்தை கொண்டும் இவ் விட***யங்***களின் பேரிலான எல்லை திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

09 2003 ஆகஸ்ட் 31 ஆம் திகதியின் பின்பு இந்த நோக்கங்களின் பொருட்டு கடன் முற்பணம் செலுத்தலாகாது.

10 இந்தச் சுற்று நிருபம் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் : பீ.ஜீ.கருணாரத்ன
தாபனப் பணிப்பாளர் நாயகம்